177

இளம் பாதர் பயிற்சி.

(TENDERFOOT TESTS)

2933

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 JAN 1943
MADRAS

177

2933

BY

R. M. SWAMI.

இளம் பாதர் பயிற்சி.

(TENDERFOOT TESTS)

By

Scouter. R. M. SWAMI,

MADRAS.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 JAN 1943
MADRAS

369.43

WITH A FOREWORD

By

Vidvan. T. P. MEENAKSHI SUNDARAM,

M.A.B.L., M.O.L.,

Published by

The South Indian Scout Equipment Co.,

ESPLANADE :: :: MADRAS.

Prize As. 4] [Postage Extra

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 JAN 1943
MADRAS

அணிந்துரை.

மக்கள் பகைத்து நின்று போராடுவதை எங்கும் காண்கிறோம். உடன் பிறந்தார் போல வாழப்பழகினாலன்றிப் போர் என்ற எரிமலை அப்போதப்போது நெருப்பைக் கக்கிக்கொண்டுதான் வரும். அவ்வாறு பழகுவது இளமை தொட்டே தொடங்க வேண்டும். இந்த நோக்கத்துடன்தான் சாரணர் இயக்கம் எழுந்தது. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாய்ச் சிறந்து விளங்கும் வழி கோலுகிறது. இந்த இயக்கம் கல்விகற்கு முறையிற் சிறந்தது என்று கூறப்பெறுவதும், இச்சாரணர் இயக்க முறையே எனப்பலரும் இப்போது அறிந்து வருகின்றனர். "ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது" உலகிடையே சென்று வாழ்ந்து உலகையறிவதே சாரணர் முறையாகும். விளையாட்டிலேயே கல்விப் பெருக்கமும், ஒழுக்க வளர்ச்சியும் ஒருங்கு திகழ்கின்றன.

இத்தகைய சாரணர் இயக்கத்தைப் பற்றிய நூல்கள் ஆங்கில மொழியில் பரக்கக்காணலாம். தமிழ் நாட்டில் சாரணர்கள் ஆயிரக்கணக்கிலிருந்தும் அவர்களுக்கு அவ்வியக்கத்தை விளக்கச் சில நூற்களே உள்ளன. இக்குறையை நீக்க திரு. முத்துசாமி நாடார் அவர்கள் இந்நூலை வெளியிட்டுள்ளார். தொடக்க முயற்சிக்கு வேண்டியவற்றை இளைஞர் எளிதில் அறியுமாறு விளக்கியுள்ளார். மேனிலைக்கு உதவுவனவற்றையும் எழுதிக் கொண்டுவருகிறார். இவையனைத்தையும் நன்கு கற்று, தமிழ்ச்சிறுவர்களனைவரும் சாரணர்களாய்ச் சிறந்து விளங்குவார்களாக!

இங்ஙனம்,

T. P. மீனாக்ஷிசுந்தரம்,

முகவுரை.

சாரணப்பயிற்சி பெறவிரும்பும் தமிழ்ச்சிறுவர்கள் சிரமமின்றி உணரவேண்டுமென்ற ஒரே நோக்கத்தைக் கொண்டு இச்சிறுநூல் தொகுக்கப்பட்டதாதலின் இலக்கிய நடை ஒருவாறு பாதிக்கப்பட்டிருப்பது இயற்கையே. எனவே ஆரம்பசாரணீயம் பயிலும் இளைஞர்கள் இந்நூலினால் ஒரு சிறு பயனேனும் எய்துவரெனின் நான் என் கடமையைச் செய்தவனாவேன்.

இதையும் இன்னும் நான் எழுதவிருக்கும் "இரண்டாந்தரச் சாரணப்பயிற்சி" "முதல்தரச சாரணப்பயிற்சி" முதலிய நூல்களையும் சீர்த்திருத்தும் நோக்கத்துடன் இப்பதிப்பில் காணப்படும் குற்றங்களைச் சிறிதும் தயங்காமல் எடுத்துக்காட்டுபவர்கள் எனக்கும் சாரணீயக்கத்துக்கும் பேருதவி புரிந்தவராவார்கள்.

இந்நூலைத் தொகுப்பதற்குக் காரண கர்த்தராயிருந்த உதவி கமிஷனர் திரு C. கிருஷ்ணசாமி அவர்களுக்கும், அச்சுப்பிரதிகளைப் படித்துத்திருத்தி உதவி செய்த சகோதரச்சாரண ஆசிரியர்கள் திரு. B. மன்னூர் ரெட்டியாருக்கும், P. B. வேணுகோபாலனுக்கும். மிகவும் கடமைப்பட்டுளேன்.

தொகுத்தோன்.

தலைச்சாரணர்.

பேடன் பவல் பிரபு.

சமூகத்தின் முன்னணியை அடைய விரும்பும் ஒவ்வொருவரும், பேடன் பவல் பிரபுவின் வாழ்க்கையைப் பின்பற்றி நடப்பார்களானால் கோரியபலனை யடைவது நிச்சயம். இவர் தம்முடைய சொந்த முயற்சியினாலேயே எடுத்த காரியங்களிலெல்லாம் உன்னதஸ்தானத்தையடைந்தார். சாதாரணப் போர்வீரனாக வாழ்க்கையை ஆரம்பித்த இவர், லெப்டினண்ட் ஜெனரல் என்னும் உன்னத ராணுவப் பதவியையும் பெற்றார். ஓய்வு நேரங்களில் வேட்டையாடப் பழகினவர், பன்றி வேட்டைப் பரிசுகளுள் சிறந்ததாகிய "Kadircup" பெற்றார். அவர் எழுதிய சித்திரங்களும், சிற்பமும், ஆங்கில அரசாங்கப்பொருட்காட்சி சாலையில் வைக்கப்

பட்டுள்ளன. ஒரேசமயத்தில் இரண்டு கைகளினாலும் சித்திரம் வரையும் வன்மை வாய்ந்தவர். இவர் ஆரம்பித்த சாரணீயம் உலகத்தில் 42 தேசங்களில் பரவி, 2,000,000 அங்கத்தினர்களைக் கொண்டதாயிற்று. உலகத்துக்கே தலைச் சாரணரானார். பிரபுப்பட்டமும் பெற்றார்.

இவர் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் சிறந்த வெற்றி பெற்றதின் இரகசியம் என்ன? இவருக்கு ஏழ்மை, தாயின் அன்பு, கடமை உணர்ச்சி பொறுப்பும் வாய்ந்த தமையன் முதலிய சாதனங்கள் கிடைத்திருந்தன என்பது உண்மைதான். ஆனால் கிடைத்த சாதனங்களையும் சந்தர்ப்பங்களையும் உபயோகப்படுத்திக் கொண்டது தான் வெற்றியின் இரகஸியம்.

இவர் கி. பி. 1857-ம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 22-ம் தேதி பிறந்தார் இவருடைய மூன்றாவது வயதில் இவருடன் பிறந்த நான்கு சகோதரர்களையும், ஒரு சகோதரியையும் விட்டு விட்டு இவர் தந்தை மரணமடைந்தார். இத்தனை பெரிய குடும்பத்தின் சம்ரக்ஷணைக்குப் போதிய திரவியம் தாயினிடத்தில் இல்லை. ஆகவே பிள்ளைகள் ஒவ்வொருவரும் கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டியது அவசியமாயிற்று. ஓய்வு நேரங்களில் தனது மூத்த சகோதரரின் தலைமையில் "கோசினூர்" என்ற படகில் ஏறி, நதிகளிலும் சமுத்திரங்களிலும் பிரயாணஞ் செய்வார். அப்பொழுது, படகு ஓட்டுதல், பழுது பார்த்தல், தச்சு வேலை, வர்ண வேலை, நீந்துதல், சமையல், குடிசைகட்டுதல் முதலியவற்றில் தேர்ச்சிபெறுவது அவசியமாயிற்று.

சிறுவயதிலேயே, புத்தி கூர்மையும், ஊக்கமும், விடா முயற்சியும் பெற்றிருந்தார். ஆரம்பத்திலிருந்தே வாழ்க்கையின் முன்னேற்றம், தன் முயற்சியில்தான் இருக்கிறதென்பதை உணர்ந்தார். சந்தர்ப்பங்களை நழுவ விடுவதில்லை என்ற உறுதி பூண்டார். சொந்த முயற்சியால் இலவசமாகக்கல்விகற்றுர் படைவீரராகி இந்தியாவிற்கு வந்தார். பிறகு தென் ஆப்பிரிக்காவுக்கு மாற்றப்பட்டார். அங்கு போயர் சண்டையில் ''மாப்கிங்'' (MafeKing) என்ற பட்டணம் பகைவர்களால் முற்றுகை யிடப்பட்டபொழுது, இவர் காட்டிய வீரமும், கையாண்ட போர் முறைகளும் இவருக்குப்புகழ் அளித்தன.

இச்சண்டையில் படைவீரர்களின் தொகை, மிகவும் குறைவாகயிருந்ததால் அங்குள்ள சிறுவர்களேயும் சேர்த்துக் கொண்டு பலவிதங்களில் படைவீரருக்கு உதவி செய்தார். இந்தச் சேவையில் சிறுவர்கள் காட்டிய ஊக்கம் இவருக்கு ஒரு புது உணர்ச்சியை அளித்தது.

சிறுவர்களேச் சரியான வழியில் பழக்கினுல், தேசத்திற்கு விசேஷ நன்மை ஏற்படுவது திண்ணம் என உணர்ந்தார். 1907-ம் ஆண்டில் சில பிள்ளேகளே ப்ரௌன்ஸீ (Brown Sea) தீவிற்கு அழைத்துச் சென்று ஒரு வாரம் வரையில் பாடி வாழ்க்கைப் பயிற்சி யளித்தார், இவ்வாழ்க்கையை இளேஞர்கள் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்ருர்கள்.

1908-ம் ஆண்டில், பலமானிட இயற்கை சாஸ்திர நிபுணர்கள், கல்வி இலாகா, தேசப்பயற்சி இலாகா தலேவர்கள் முதலியோரின் ஆராய்ச்சி, தமது வாழ்க்கையின் அனுபவங்

கள் எல்லாவற்றையும் திரட்டி "சிறுவர் சாரணீயம்" என்ற நூலை எழுதினர். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சாரணீயத்தைப்பரப்பினர்.

1912-ம் வருஷத்தில் "ஒலேவ்" அம்மையை மணந்தார்.

1920-ம் வருஷம் ஒலிம்பியாவில் நடந்த சாரணர் பெருங் கூட்டத்தில் (Jamboree) உலகச்சாரணத் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார் சாரணீயம் உலகெங்கும் சிறப்புற்றோங்குவதையும், அதனுல் உலகத்துக்கு ஏற்படும் நன்மையையும் பாராட்டி 1929-ம் வருஷம் "பர்க்கன் ஹேட்"ல் நடந்த சாரணப் பெருங்கூட்டத்தில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் இவரைப் "பிரபு" ஆக்கினர்.

வாலிபர் உலகத்துக்கே வளம் அளித்த பெருந்தகையாகிய இவர், உலகமக்கள் வருந்த, உலகச் சாரணர்கள் கலங்க, நயரி கேன்யாவில் 1941-ம் வருஷம் ஜனவரி மாதம் 8-ந்தேதி மரணமடைந்தார்.

ஆத்துமா அமைதியடைக!

இளம்பாதர் பயிற்சி.

நீ இப்பொழுது தான் சாரணப்படையில் சேர்ந்திருக்கிறாய். சாரண உடையும், (Uniform) சின்னமும் உனக்குக் கொடுக்கப்படு முன், நீ அறிந்து கொள்ளவேண்டிய சில விஷயங்கள் உள்ளன.

இச்சாரண இயக்கம், உலகத்தில் அநேகமாய் எல்லாத் தேசங்களிலும் பரவியிருக்கிறது. எங்குச் சென்றாலும், சாரண உடையும், சின்னமும் அணிந்து, முகத்தில் புன்னகையுடன் பல, சாரணச் சகோதரர்கள் வரவேற்பார்கள் என்பதை உன் மனதில் பதிக்க வேண்டும். நீ இவ்வியக்கத்தில் சேர்வதால் உன்னுடைய பொறுப்பு எவ்வளவு அதிகரிக்கிறது என்பதை யோசித்துப்பார். சாரணர்கள் எல்லோருமே, குற்ற மற்ற வாழ்க்கையினால் தேகபலமும், மனோபலமும் அடையவும், தந்நலங்கருதாது, தேசத்துக்கும், பிறருக்கும் சேவை செய்யவும் பயிற்சி பெற உறுதி கொண்டவர்கள். இவ்வித இலக்ஷக்கணக்கான சாரணர்களுக்கு உன்னுடைய நடத்தை கௌரவத்தைக் கொடுப்பதாயிருக்க வேண்டும்.

சாரணர்களின் கோட்பாடு "ஆயத்தமாயிரு" என்பதாம். அதாவது எந்தச் சமயத்திலும், என்ன கஷ்டம் ஏற்படுவதாயிருந்தாலும் பிறருக்கு உதவி புரியத்தயாராயிருக்க வேண்டும் இத்தகைய உதவி புரிவதற்கு நாம் எந்தெந்த விஷயங்களில் பயிற்சி பெறவேண்டுமோ, அவற்றை ஆர்வத்துடன் பயிலவேண்டும்.

நீ சாரண உடையும் சின்னமும் பெறுவதற்குமுன் கீழ்க்கண்ட பயிற்சிகளில் தேர்ச்சிபெறவேண்டும்.

பயிற்சி 1.

சாரண உறுதி மொழி (Promise) சாரணவிதிகள். (Laws)

அவற்றின் அர்த்தமும் தெரிந்து கோள்.

சாரண உறுதி மொழியிலும் விதிகளிலும் சொல்லிய படி நடப்பது மிகவும் கடினமாகத் தோன்றலாம். ஆனல் உனக்குமுன் பலர் இதே பிரதிக்ஞையைச் செய்து அதன்படியே வெகு கண்யமாகவே நடக்கின்றுர்களே இது உனக்குத் தைரியம் கொடுக்கவில்லையா?

a. சாரண விதிகள்:—

1. சாரணனின் நாணயம் நம்பத்தக்கது:

இதன் அர்த்தம் என்ன ?

சாரணனின் வார்த்தைக்குப் பெருமதிப்பு ஏற்படவேண்டும். எனவே சாரணன் உண்மையேபேசவேண்டும்.

2. சாரணன், அரசனிடத்தும் தேசத்தினிடத்தும், பெற்றேரிடத்தும். உயர்பதவியிலிருப்போரிடத்தும், தன்னை விடத் தாழ்ந்த பதவியிலிருப்பவரிடத்தும், உண்மை விசுவாசத்துடனிருப்பான். அவர்கள் அன்புக்குப் பாத்திரனுயிருப்பான்.

3. சாரணனின் கடமை உபயோக முள்ளவனுகவும் பிறர்க்குதவி செய்பவனுயுமிருப்பதே.

தன் சொந்த சௌகரியம் பாதிக்கப் படுவதாயிருந்தாலும், பிறர்க்குதவி செய்யப் பின் வாங்கலாகாது.

4. சாரணன் எல்லோரையும் நண்பர்களாகவும் மற்றச், சாரணர்கள் எந்த நிலையிலுள்ளவர்களாயிருந்தாலும் சகோதரர்களாகவும் பாவிப்பான்.

புதிதாக ஒரு சாரணனைக் கண்டால் முன் பின் தெரியாதவனுயிருந்தாலும், அவனுடன் பேசி அவனுக்கு ஏதாவது உதவி செய்யக்கூடுமானல் செய்ய வேண்டும். ஒருவனை ஏழை யென்று இகழலாகாது. பணக்காரனென்று வெறுப்புடன் நடத்தக்கூடாது.

5. சாரணன் மரியாதை யுள்ளவன்.

பொதுவாக எல்லோரிடத்தும் அடக்கமாகவும், மரியாதையாகவுமிருப்பதுடன் மாதர்களிடத்தில் கண்யமாகவும் குழந்தைகளிடம் அன்புடனும் நடந்து கொள்ளவேண்டும். முக்கியமாகத் தான் செய்யும் உதவிக்குப், பிரதியுபகாரம் பெறுவதாவது, எதிர்ப்பார்த்தலாவது கூடாது.

6. சாரணன் பிராணிகளின் தோழன்.

அவைகளுக்கு அனுவசியமான கஷ்டமும், இம்ஸையும் ஏற்படாமல் காப்பாற்றவேண்டும்.

7. சாரணன், பெற்றோர், அணித்தலைவர், சாரண ஆசிரியர் முதலியவர்கள் கட்டளைக்குப் பதில் பேசாது கீழ்ப்படிவான்.

8. சாரணன், எவ்வித கஷ்டம் வந்தாலும் உற்சாகமும் புன்னகையும் கொள்வான்.

முணு முணுப்பதினுலும், கோபத்தினுலும் கஷ்டத்தினின்று விடுபடமுடியாது. அமைதியும் உற்சாகமுமே, எல்லாவித சிரமத்திற்கும் பரிகாரம்.

9. சாரணன் சிக்கனமுள்ளவன்.

பணம் மாத்திரமல்ல காலத்தையும் சந்தர்ப்பத்தையும் கூட வீணுக்கக்கூடாது.

10. சாரணன் மனம் வாக்கு கயாம், இவற்றில் சுத்தமுடையவன்.

ஆபாசமான வார்த்தைகளைப் பேசவாவது, நினைக்கவாவது தேசத்தை அசுத்தமாக வைத்துக்கொள்ளவாவது ஒருபொழுதும் இடம்கொடுக்கக் கூடாது

6. சாரணன் உறுதி மொழி:—

என் கண்யத்தின் ஆணையாக:

1. கடவுளுக்கும் அரசனுக்கும் தேசத்திற்கும் எனது கடமையைச் செய்யவும்.

2. எந்தச் சமயத்திலும் பிறருக்கு உதவி செய்யவும்,

3 சாரண விதிகளுக்குக்கீழ்ப்படியவும் என்னால் கூடியதைச் செய்வதாக உறுதி கூறுகிறேன்.



பயிற்சி 2,

சாரண வந்தனம். உலகத்தில் எல்லோருமே ஒருவர் மற்றொருவரைப்பார்த்தால் வந்தனம் செய்கிறார்கள். தேசங்களுக்கேற்பவந்தன முறைகள் வேறுபடுகின்றன. நம் தேசத்தவர் கைகூப்பி நமஸ்கரிக்கின்றனர். வேறு தேசங்களில்

ஆலிங்கனம் செய்தல் முதல் பலவித முறைகளை அனுசரிக்கிறார்கள். ஆனால் இதன் அர்த்தம் மாத்திரம் எல்லா தேசத்தவருக்கும் ஒன்றேதான். ஒருவர் மற்றவரைப் பார்த்த உடன், அவரிடத்தில் தமக்குள்ள அன்பையும், நேசத்தையும் வெளிக்காட்டுவதேயாம்.

சாரணர்கள் படத்தில் காட்டியபடி வலது சுண்டு விரலைப் பெருவிரலால் மடக்கிக் கையை வலது புருவம் வரையில் உயர்த்தி மற்ற மூன்று விரல்களும் மேல் நோக்கியும், உள்ளங்கை முன்பக்கம் தெரியும்படியும் வந்தனம் செய்கிறார்கள். இதற்கு முழு வந்தனம் என்று பெயர்.

ஒரு சாரணன் சாரண உறுதிமொழி செய்யும் பொழுது வலது கையை மேற்சொல்லியபடி தோள் வரையில் மட்டும் தூக்கி வந்தனம் செய்கிறான். இதற்குச் சாரண சமிக்ஞை (Scout Sign) என்றும் அரைவந்தனம் என்றும் பெயர்.

கையில் சாரணக்கோல் வைத்துக்கொண்டு நிற்கும் பொழுதும், நடக்கும் பொழுதும் வந்தனம் செய்யும் விதம் படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

யார் முதலில் வந்தனம் செய்வது ?

யார் முதலில் பார்க்கிறார்களோ அவர்கள் வந்தனம் செய்யவேண்டும். ஸைக்கிளில் போகும் பொழுதும்; கைகளினால் எக்காரணத்தினாலும் வந்தனம் செய்ய முடியாத பொழுதும் யாருக்கு வந்தனம் செய்யவேண்டுமோ அவர் பக்கம் தலையை மாத்திரம் விரைவாகத்திருப்பி முகத்தில் புன்னகை தோற்றுவித்தல் ஒருவித வந்தனமாகும்.

வந்தனம் செய்வதின் அர்த்தம் என்ன வென்று முன்னால் சொல்லியிருக்கிறோம். சாரணன் செய்யும் வந்தனத்துக்குச் சில விசேஷ அர்த்தங்களுமுண்டு.

முதலாவதாகச் சாரண உடையிலில்லாத போதுங்கூட நாம் ஒருவருக்கொருவர் சாரணர் என்று அறிவிக்கும் சங்கேத மாகிறது.

மூன்று விரல்களால் வந்தனம் செய்வதால், நாம் செய்துள்ள மூன்று பாகங்களடங்கியச் சாரண உறுதி மொழி நமக்கு ஞாபகப்படுத்தி, அதன் படி நடக்க நம்மால் கூடியதைச் செய்யவேண்டும் என்றக்கடமையைச் சுட்டிக்காட்டுகின்றது.

நம் சொந்த சௌகரியத்தைக்குறிக்கும் சுண்டு விரலை சமூக நலமாகிய பெருவிரலுக்குக்கீழ்படுத்தித் தெய்வத்தினிடத்தில் முழு நம்பிக்கையுடன் மேன் மேலும் சேவை செய்ய பிரயத்தினப்படுவோம் என்பதாக விரல்களின் நுனி, மேல் நோக்கி இருக்கும்படி வைத்து வந்தனம் செய்கிறோம்.

சாரணர் ஒருவரை யொருவர் சந்திக்கும்பொழுது இடதுகையினாலேயே கைக்குலுக்குகின்றார்கள். இது ஹிருதய பூர்வமான நேசம் உள்ளவர்கள் என்பதைக் குறிக்கின்றது.

பயிற்சி: 3. சாரணச்சங்கேதங்கள்:—

தன் மனதில் உள்ளவற்றை மற்றச்சாரணர்களுக்குப் பிறர் அறியாமல் தெரிவிக்கப் பல வழிகள் உண்டு. அவற்றில் தன்னைப் பின்தொடர்ந்து வரும் சாரணர்களுக்குத் தான் போன வழி தெரியும் பொருட்டுப் போடுவதற்கான சில அடையாளங்கள் உண்டு. இந்த அடையாளங்களைப் பாதையின் வலப்புறத்தில் சிறுகற்கள், கிளைகள் முலியவற்றைக் கொண்டாவது, புல் செடிகளைக் கொண்டாவது, மரங்களில் காகிதத்தைப் பதித்தாவது, தரையில் எழுதியாவது வைக்கலாம். சுவற்றில் எழுதுவதும், உயிர் மரங்களைச் செதுக்குவதும் சரியல்ல.



இந்த வழியாகப் போ.
இந்தத்திசையில்மூன்று அடி தூரத்தில் கடிதம் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த வழி போகாதே
நான் வீட்டுக்குப் போய் விட்டேன்.
இவ்விடத்தில்கலகமும்குழப்பமுமாக இருக்கிறது
இவ்விடத்தில் சமாதானம் நிலவி நிற்கிறது
எங்களுள் ஒருவர் அசௌக்கியமாயிருந்ததால் இங்குத் தங்கியிருந்தோம்.
இத்திசையில் வெகுதூரத்தில் நல்ல ஜலம் இருக்கிறது.
இத்திசையில் சமீபத்தில் நல்ல நீர் இருக்கிறது
இது நல்ல ஜலம்.
நாலாவது கள்ளிக்கோட்டை படை, ஓநாய் அணி, நாலாவது சாரணன் கையெழுத்து.

பயிற்சி: 4. யூனியன் ஜாக்கின் (ஐக்கியக் கொடி) அமைப்பும் அதைப் பறக்க விடும் சரியான முறையும்:—

இங்கிலாந்து தேசக்கொடி.



1

ஸ்காட்லந்து தேசக்கொடி.



2



3

அயர்லந்து தேசக்கொடி.

சரியான முறை.



4



5

தப்பான முறை.

யூனியன் ஜாக்.

கொடிகள் தேசத்தின் சுதந்திரத்தையும், பெருமையையும் குறிக்கும் சின்னங்கள். தேசத்தின் கொடியினிடத்தில் தேசமக்களுக்கு அளவற்ற அன்பும், பெருமதிப்பும் இருக்க வேண்டும். நம் முன்னோர்கள் தங்கள் தேசக்கொடியின் கௌரவத்தைக் காப்பாற்றத் தங்கள் உயிரைக் கூட எவ்வளவு ஆர்வத்துடன் தியாகம் செய்திருக்கிறார்கள் என்பது நம் தேச சரித்திரத்தைப் பார்த்தால் தெரியும்.

யூனியன் ஜாக் என்பது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொடி. இக்கொடியின் அமைப்பைக் கவனித்தால் அத்தேசத்தினர் அக்கொடிக்கு எவ்வளவு முக்கிய ஸ்தானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்பது நன்கு விளங்கும்.

இக்கொடியில் இங்கிலாந்து, ஸ்காத்லந்து, அயர்லாந்து ஆகிய மூன்று தேசங்களின் கொடிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இங்கிலாந்து தேசக்கொடி வெள்ளை நிறத்தில் குறுக்காக கூட்டல் குறி போன்ற செங்கோடு போடப்பட்டிருக்கும். இதற்கு "ஸேயிண்ட் ஜார்ஜ் கொடி" என்று பெயர்.

கி. பி. 1603ஆம் ஸ்காத்லந்தின் அரசரான ஜேம்ஸ் மன்னரே, இங்கிலாந்துக்கும் அரசராகவே இவ்விரண்டு கொடிகளும் ஒன்று சேர்க்கப்பட்டன. தங்கள் தேசக் கொடியின் நிறமும், குறுக்குக் கோடுகளும் புதுக்கொடியில் அமைக்கப்படவேண்டும் என்று இரு தேசத்தினரும் வற்புறுத்தினர். ஸ்காத்லந்து தேசக்கொடியாகிய, நீல நிறத்தில் மூலைக்கு மூலை பெருக்கல் குறிபோன்ற வெள்ளைக் கோடிட்ட "ஸேயிண்ட் ஆண்ட்ரூஸ்" கொடியும் "ஸேயிண்ட் ஜார்ஜ்" கொடியுடன் சேர்க்கப்பட்டது.

அப்படி அமைக்கப்பட்ட புதுக்கொடியைப் படத்தில் பாருங்கள்.

கி. பி. 1801ல் அயர்லந்து தேசத்தினர் தங்கள் தேசமும் இங்கிலாந்து தேசத்தோடு சேரவேண்டுமென்று ஒரு சட்டம் செய்தார்கள். (act of union.) அவர்கள் தேசக் கொடி வெள்ளை நிறத்தில் மூலைக்கு மூலை செங்கோடு போட்ட "ஸேயிண்ட்பாட்ரிக்" கொடி. இக்கொடியைப் புதுக் கொடியோடு சேர்ப்பதில் ஸ்காத்லந்து தேசமக்களுக்கும், அயர்லந்து தேசமக்களுக்கும் விவாதம் ஏற்பட்டது. மூலைக்கு மூலையாகப்போகும், வெள்ளை சிவப்பு வர்ணமுள்ள இரண்டு கோடுகளில் தங்களுடையதாகிய வெள்ளைக் கோடுதான் மேலிருக்கவேண்டு மென்று ஸ்காத்லாந்தினரும், செங்கோடுதான் மேலிருக்கவேண்டுமென்று அயர்லந்தினரும் வற்புறுத்தினர் கடைசியாகக் கொடிஸ்தம்பத்தோடு பிணைக்கப் பட்டிருக்கும் பாதியில் ஸ்காத்லந்து கொடியைக் குறிக்கும் வெள்ளைக்கோடு மேலாகவும் கொடிபறக்கும் பக்கமுள்ள பாதியில் அயர்லந்து தேசக்கொடியைக் குறிக்கும் சிவப்புக் கோடு மேலாகவும் அமைப்பதாகத் தீர்மானித்தனர். இங்கிலாந்து அயர்லந்து தேசக்கொடிகளின் நிறத்தைக் குறிக்கும் பொருட்டு, சிவப்புக் கோட்டைச் சுற்றிலும் மெல்லிய வெள்ளை அறுகு போடப்பட்டது.

கோடியின் அளவு:—

கொடியின் நீளம் 60 அங்குலம், அகலம் 30 அங்குலம். "சேயிண்ட் ஜார்ஜ்" சிலுவையின் அகலம் 6 அங்குலம்

"சேயிண்ட் ஆண்ட்ரூஸ்" (மூலைக்கு மூலைபோகும் வெள்ளைக் கோடு) "சேயிண்ட் பாட்ரிக்" (மூலைக்கு மூலைபோகும் சிவப்புக்கோடு) கோடுகள் மூன்று அங்குலம் செயிண்ட் ஜார்ஜ், சிலுவையைச் சுற்றிலும், செயிண்ட் பாட்ரிக் சிவப்புக் கோட்டின் பக்கத்திலும் போகும் மெல்லிய அறுகு ஒரு அங்குலம்

பறக்கவிடும் விதம்:—

ஐக்கியக் கொடியைப் (Union Jack) பிணைக்கப்பட்டிருக்கும் பக்கத்தில் அகன்ற வெள்ளைக்கோடு மேலிருக்கும்படியாகப் பறக்கவிடுவது தான் சரியான முறை.

தலை கீழாகப் பறக்கவிட்டால் தேசத்திற்கு கஷ்டம் ஏற்பட்டிருப்பதைக்குறிக்கும். கொடி மரத்தின் உச்சியிலல்லாமல் கீழே இறக்கிப் பறக்க விட்டால் அரச குடும்பத்தில் நிகழ்ந்த மரணத்தைக் குறிக்கும்.

இனி நமது சாரணக்கொடியின் அமைப்பைப்பற்றியும் கொஞ்சம் தெரிந்து கொள்வது அவசியமல்லவா? இது பச்சைக் கொடியில் இந்திய தேசம் வரைந்து அதன் நடுவில் சாரணச்சின்னமும், இந்தியச் சாரணர்கள் என்று எழுதப்பட்ட சுருளும் உடையது. சாரணச் சின்னத்தைக் கவனிப்போம். இது பார்வைக்கு மூன்று பிரிவுகளுடைய அம்பின் முனையைப் போல் இருந்தாலும், உண்மையில் மாலுமியின் திசைகாட்டும் கருவியிலுள்ள வட திசையைக் குறிக்கும் அடையாளமேயாகும். இதன் அர்த்தம் சாரணர்கள் தங்கள் பயிற்சியினாலும், வாழ்க்கையினாலும் உலகத்துக்கே அமைதியும், சந்தோஷமும் அளிக்க வழிகாட்டிகளாக வேண்டும் என்பது தான். இதன் மூன்று பிரிவுகளும்



மூன்று பாகங்களடங்கிய சாரண உறுதிமொழியைக் குறிக்கின்றன. இரண்டு பக்கத்திலும் உள்ள நக்ஷத்திரங்கள், சாரணர்கள் இரண்டு கண்களையும் திறந்து கொண்டிருப்பார்கள் என்பதை நினைவூட்டுகிறது. அதாவது தான் பார்ப்பவற்றை ஒன்றும் விடாது கவனித்து அதைப்பற்றிய விஷயங்களை முழுதும் கிரகிக்கும் சக்தியை உடையவன் சாரணன். ஒவ்வொன்றிற்கும் ஐந்து முனையாக இரண்டு நக்ஷத்திரங்களிலும் உள்ள பத்து முனைகளும் பத்துச் சாரண விதிகளைக் குறிக்கின்றன. நடுவிலுள்ள குறுக்குக் கோடு உலகத்திலுள்ள சாரணர்கள் எல்லோரும் "சகோதரத்வம்" என்ற கயிற்றால் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டும். இந்தக் கோட்டின் மத்தியிலிருந்து மேல் நோக்கிப் போகும்கோடு

அடியில்பெருத்தும், மேலேபோகப்போகச்சிறுத்தும்முடிவில் அறவே மறைந்து போவதைப் பார். நாம் சாரண இயக்கத்தில் சேரும் பொழுது, ஜாதி, மதம், பொருள் முதலியவற்றால் ஏற்படும் வித்தியாசம், எவ்வளவு அதிகமாக உடையவர்களாகயிருந்த போதிலும் சாரணப் பயிற்சியின் முதிற்சியால் அவை குறைந்து கொண்டே போய் முடிவில் அறவே ஒழிந்து போகின்றன என்பது தான் இதன் அர்த்தம்.

கீழேயுள்ள சுருளின் இரு நுனிகளிலும் மேல் நோக்கியிருப்பது என்ன கஷ்டமேற்பட்டாலும் முகமலர்ச்சியுடன் பிறர்க்குதவுவான் என்று அறிவிக்கின்றது. (நகைப்பின் கடை உதடு மேல் நோக்குவதையும், முகம் வாடின் கீழ் நோக்குவதையும் கவனி)

பயிற்சி 5:— முடிச்சுகள்:—

சதுரமுடி (Reef Knot) மணி முடி (Sheet bend) யானைக் கொலுசு (Clove Hitch) வில் முடி (Bow Line) தண்டு முடி (Sheep Shank) ஒரு சுற்றும் இரண்டு அரை முடிச்சுகள் (Round turn & two half Hitches.) இவைகளைச் சரியாகப் போடவும், இவைகளின் உபயோகத்தைத்தெரிந்து கொள்ளவும் வேண்டும்.

முடிகள் போடுவது மிகவும் சுலபமாகத் தோன்றலாம். ஆனல் முடிகளைச் சரியாகப் போடாவிட்டால் பல விபத்துக்கள் ஏற்படலாம்.



ஒரு சாரணன் போடும் முடிகளுக்குக்கீழ்க்கண்ட இலக்ஷணங்கள் வேண்டும்:—

1. முடிகள், சுலபமாகப் போடக் கூடியவைகளாக இருத்தல் வேண்டும்.

2. முடிகள் சுலபமாக அவிழ்க்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

3. முடிகள் உறுதியாகயிருந்து வேண்டிய காரியங்களுக்கு உபயோகப் படவேண்டும்.

முடிகள் போடப்பழகும் பொழுது குறைந்தது ஒரு அங்குல சுற்றளவுள்ள கயிற்றையேனும் உபயோகிக்க வேண்டும். இக்கயிற்றின் இருமுனைகளையும் மெல்லியகயிற்றினல் கெட்டியாகக் கட்டவேண்டும். (Whipping.)

(Reef Knot.) சதுர முடி :—

ஒரு கயிற்றின் இருமுனைகளையும் ஒன்றுசேர்ப்பதற்கும் ஒரே பருமனுள்ள இரண்டு கயிற்றின் முனைகளை ஒன்று சேர்ப்பதற்கும், இம்முடி போட வேண்டும். முக்கியமாகக் காயங்களுக்குக் கட்டும் பொழுதும், பார்ஸல் கட்டும் பொழுதும் இம்முடி உபயோகப்படுகிறது.

2. மணி முடி (Sheet bend)

ஒரு மெல்லிய கயிற்றையும் சற்று பருமனன கயிற்றையும் ஒன்றுசேர்க்க இம்முடி உபயோகப்படுகிறது.

3. யானைக் கோலுசு (Clove Hitch)

மரத்தில் மாடு முதலியன கட்டுவதற்கும், மரக்கிளைகளில் கயிறு கட்டித் தொங்கவிடவும் இம்முடி உபயோகமாகும்.

4, வில் முடி (Bow Line)

இது மிகவும் உபயோகமான முடி. இதை எளிதில் தன் இடுப்பிலும், பிறர் இடுப்பிலும் அவசியமானல் ஒரே கையாலும் போடக்கற்றுக் கொள்ள வேண்டும்.

5 தண்டு முடி (Sheep Shank) கயிற்றைத் துண்டிக்காமலே, தற்காலிகமாக அதன் நீளத்தைக் குறைக்க உபயோகப்படுத்தலாம்.

7. ஒரு சுற்றும் இரண்டு அரை முடிகளும் :—

ஒரு கயிற்றின் முனையை ஒரு மரத்திலோ, கொம்பிலோ கட்டுவதற்குஏற்றது. முக்கியமாகப் படகுகளைக் கரையில் உள்ள முளைகளிற் கட்ட உபயோகப்படுகிறது.

6. சாரணர் கோலின் உபயோகம்:—

சாரணக் கோலினுல் அளவற்ற பிரயோஜனமுண்டு. தன்னை ஆபத்தினின்றும் காப்பாற்றும் ஆயுதமாகும். பள்ளங்களைத் தாண்டிச் செல்லவும், இரவில் வழிபார்த்து நடக்கவும், மலை முதலியவற்றின் மேலேறவும் ஊன்றுகோலாக உபயோகிக்கலாம். கூடாரம், பாலங்கள், காயம் பட்டவர்களைத் தூக்கிச் செல்ல டோலிகள் முதலியன கட்டுதல் போன்ற பலவிதங்களில் உபயோகப்படுகிறது. இதனுல் தான் சாரணர் கோல் சாரண உபகரணங்களின் ஒரு முக்கியாம்சமாகக் கருதப்படுகிறது.

இதை அளவு கோலாகவும் தனது சாரண வாழ்க்கையின் முக்கிய அம்சங்களைக்குறிக்கும் குறிப்புப் புத்தகமாகவும் உபயோகிக்கலாம்.

காதளவு உயரமும் சன்னமும் உள்ள, ஒழுங்கான கெட்டி மூங்கில் ஒன்று இருந்தால் போதும் அதில் முதலில் அடிகளாகவும், அங்குலங்களாகவும் பிரிக்க, சிறு கோடுகள் செதுக்கப்படவேண்டும். பின்னர்சாரணச்சின்னம், தன் படையின் சங்கேதம், அணி மிருகம் அல்லது பக்ஷியின் உருவம், அணியில் தன் பதவி முதலியவற்றைச் செதுக்கலாம்.

தான் சாரணன் ஆன தேதி, விசேஷ சின்னங்களும் அவை தனக்குக் கொடுக்கப்பட்ட தேதிகள், தன் யாத்திரைகள், தான் விஜயஞ் செய்திருந்த சாரணப் பெருங்கூட்டங்கள் (ஜாம்போரிகள்,) மற்றும் தன் சாரண வாழ்க்கையில் ஏற்பட்ட விசேஷ சம்பவங்கள் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

பயிற்சி 6 ;—

கயிற்றின் நுனி பிரிந்து போகாதபடி நூலினல் பின்னக் கற்றுக் கொள்ள வேண்டும். (Whipping)

முடிகள் போட்டுப்பழகுமுன் கயிற்றின் முனைகள் பிரிந்து போகாதபடி ஏதாவது ஓர் உபாயம் செய்ய வேண்டும். - கயிற்றின் நுனியில் சாதாரண முடியிடுதல், கயிற்றைக் கொஞ்சம் பிரித்து அப்பிரிகளைக் கொண்டே பின்னி விடுதல் (Splicing) நூலினல் இருகக் கட்டுதல் முதலிய முறைகளைக் கையாளுகிறுர்கள்.

இதில் நூல்கொண்டு கட்டும் முறை 17-ம் பக்கத்தி லுள்ள படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

பயிற்சி 7:—



ஒழுங்காகவும் சீக்கிரமாகவும் தலைப்பாகைக் கட்டத் தெரிந்து கொள்ள வேண்டும்.

சாரண உடையை, ஒழுங்காக அணிய வேண்டிய அவசியத்தைப்பற்றி முன்னமே சொல்லியிருக்கிறோம். சாரண உடைக்கு அழகு அளிப்பதோ அதன் அழகைக் கெடுப்பதோ பெரும்பாலும் தலைப்பாகையின் அமைப்பைப் பொருத்ததாக வேயிருக்கிறது. ஆகவே சாரணர்கள் ஒழுங்காக தலைப்பாகைத் கட்டும் விதம் தெரிந்து கொள்ள வேண்டும்.

சீக்கிரம் கட்டுவது பழக்கத்தினால் தானாகவே வருகிறது.

தலைப்பாகை கட்டும் விதம் பக்கத்திலுள்ள படத்தில் காட்டப்பட்டிருக்கிறது

சின்னம் அளித்தல் :—



மேற்கூறிய பயிற்சிகளில், நீ தேர்ச்சி பெற்றால், சாரணச்சின்னம் பெற அருகதையுடையவனா கிறாய். ஒரு நாள் உன் படையில் பின் வரும் சம்பவம் நடக்கலாம். படையைக் குதிரை லாடம் போல் வட்டமாக நிறுத்தி மத்திய இடைவெளியில் உன்சாரண ஆசிரியரும் உதவி ஆசாரியரும் நிற்பார்கள். நீயும் உன் அணித்தலைவனும வட்டத்திற்குள் ஆசிரியருக்கு எதிரில் நிற்பீர்கள். ஆசிரிம் ருக்கு முன்னால் சிறு மேஜையின் மீது சாரணச்சின்னம் கழுத்து உடை (Scarf) தோள்முடி முதலியன இருக்கும்.

ஆசிரியர் சட்டளையிட்டதும் அணித்லைவன் உன்னை அவர் முன் கொண்டு வந்து நிறுத்துவான். பிறகு ஆசிரிய. உன்னை நோக்கி "உன் கண்யப் பொறுப்பு என்றால் என்ன என்பதை யறிவாயா?" என்பார், உடனே, நீ "தெரியும், நான் உண்மையுள்ளவன் என்றும், யோக்கியன் என்றும் நம்பததகுந்தவன்" என்பாய். அவர் "நீ சாரணச்சட்டங்களை அறிவாயா"? என்பார், நீ "அறிவேன்" என்பாய்.

அவர் "உன் கண்யத்தின் ஆணையாக, கடவுளுக்கும், அரசனுக்கும், தேசத்துக்கும் உனது கடமையைச் செய்யவும், எந்தச் சமயத்திலும் பிறருக்குதவி செய்யவும் சாரண விதிகளுக்குக் கீழ்ப்படியவும் உன்னால் கூடியதைச் செய்வாய் என்று நம்பலாமா? என்பார். உடனே நீ சாரண சமிக்ஞையைச் (Scout sign) செய்வாய். படையிலுள்ள ஒவ்வொருவரும் அவ்விதமே செய்வார், நீ "என் கண்யத்தின், ஆணையாகக் கடவுளுக்கும், அரசனுக்கும், தேசத்துக்கும் என் கடைமையைச் செய்யவும்; எந்தச்சமயத்திலும் பிறருக்குதவி செய்யவும், சாரணச்சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து என்னால் கூடியதைச் செய்வேன்" என்பாய் அவர் "உன் கண்யத்தின் ஆணை யாக இந்த வாக்குறுதி, யினின்றும் தவறமாட்டாய் என்று நம்புகிறேன். உலக முழுவதும் பரவியுள்ள சாரணச் சகோதரர் சமூகத்தில், நீயும் ஒருவனாகி விட்டாய்." என்று சொல்லி, சாரணச் சின்னத்தைச் சூட்டுவார். பின்னர், படையின் அறிகுறியாகிய கழுத்து உடையை உன் கழுத்தில் அணிவார். உதவி ஆசிரியர் உன் தலையில் தலைப்பாகையை அணியச் செய்து கையில் சாரணத் தண்டத்தைக் கொடுப்பார். உன் அணித்தலைவன் உன் இடது தோளில் தோள் முடியை அணிவான். பின்னர்

ஆசிரியர் உன் இடது கையைத் தன் இடது கையில்பிடித்துக் குலுக்குவார். நீயும் உன் அணித்தலைவனும் பின் பக்கம் திரும்புவீர்கள். நீ படைக்கு வந்தனம் செய்வாய். படையில் ஒவ்வொருவரும் வந்தனம் செய்வார்.

ஆசிரியர் " உன் அணிக்கு வேகமாகச் செல் " என்று கட்டளையிடுவார். உன் அணித்தலைவனும் நீயும் உங்கள் அணிக்குப் போய் விடுவீர்கள்.

சாரண உடை (Scout uniform) :—

சாரண இயக்கத்தின் பெருமைக்கும், கௌரவத்துக்கும் இழிவு ஏற்படாமல் இருக்க வேண்டுமானால், சாரணர்கள் சுத்தமாகவும், ஒழுங்காகவும் உடைகளை அணியத்தெரிந்து கொள்ள வேண்டும். சாரண உடையின் ஒவ்வொரு பாகமும் ஆபத்துக்காலங்களில் நமக்கும், பிறருக்கும் உபயோகப்படக் கூடியது

ஒரு படையைச் சேர்ந்த அனைவரும் ஒரே விதமான உடையை அணிய வேண்டும். தலைப்பாகை பாதரக்ஷை முதலியன. சிலர் அணிந்து, சிலர் அணியாமலிருப்பது சரியல்ல.

சாரண உடுப்பு :—

தலைக்குக், காக்கி நிறத்தொப்பி (Hat) யாவது, காக்கி பச்சை அல்லது கழுத்து உடையின் (Scarf) நிறமுள்ள தலைப்பாகை அணியலாம்.

கழுத்துக்கு:—படையின் பிரத்தியேக நிறமுள்ள கழுத்துஉடை (Scarf). இது முக்கோணவடிவமாக உள்ளது. இதன் முனை முதுகெலும்பின் மேல் இருக்கும்படி கழுத்தைச் சுற்றிக் கொண்டு வந்து தொண்டைக்கு அடியில் ஒரு முடி அல்லது ஒரு வளையம் போட்டு இரண்டு நுனிகளையும் சேர்த்து ஒரு முடி போட்டுத் தொங்க விட வேண்டும்.

கண்ட வஸ்திரம் தான் ஒரு படையின் அங்கத்தின ரைக்குறிக்கும் அடையாளம். ஆகவே அதைச் சுத்தமாக, சுருக்கமில்லாமல் ஒழுங்காக அணிய வேண்டும்.

சட்டை :—காக்கி நிற முள்ள ஷர்ட் மார்புக்கு நேராக இரண்டு பக்கத்திலும் பட்டைகளுள்ள பைகளும், இரண்டு தோள் புறங்களில் பட்டை உள்ளதாயிருக்க வேண்டும்.

கால் சராய் : காக்கி அல்லது நீல அரைக்கால் சராய் Shorts

பெல்ட் Belt— கபில நிரத் (Brown) தோல் அல்லது கெட்டித் துணியால் செய்யப்பட்டது.

பாதரக்ஷை:—கபிலநிறம் (Brown) அல்லது கருப்பு நிறப் பூட்ஸ் அல்லது ஷூஸ் (Boots or Shoes.)

காக்கி நிற மேல் ஜோடு (Stockings) முழங்காலுக்கு கீழ் மடித்து விடவேண்டும். மடிப்பின் உள்ளிருந்து வெளியில் தெரியும்படி சிறுதுண்டு 'பச்சை நாடா' விட வேண்டும்.

கோல்:—Staff காதளவு உயரமும் அடி அங்குலம் வருவப்பட்டிருப்பதாகவும் இருக்கவேண்டும்.

தோள் முடி (Shoulder Knot) அணிக்குறிய நிறத்தில் 6 அங்குல நீளமும் ½ அங்குல அகலமும் உள்ள நாடாவை இடது தோள் பட்டையில் தொங்கவிட வேண்டும்.

படைப்பெயர்ச்சின்னம் (Shoulder Badge) :— படையின் பெயர் பதித்துள்ள பட்டை வலது தோள்பக்கம் தைக்கப் படவேண்டும்.

கத்தி: —(Scout Knife) கூர்மையும் உறுதியுமான கத்தியொன்றைப் பெல்டில் தொங்கவிட வேண்டும்.

ஊது குழல் :—(Whistle) சாரணர் ஊதுகுழலைக் கயிற்றில் Laneyard) கட்டி கழுத்தில் மாலை போல் போட்டுக் கொள்ள வேண்டும்.

Official Handbook

"Scouting for Boys in India"

(In Tamil)

450 pages—profusely illustrated—stiff cover binding.

Rs. 2

Postage Extra.



READY

By August 15th 1941

Second Class Tests in Tamil

The S. I. Scout Eqpt Co.,

Esplanade :: Madras.

Expert & Co. Printers Madras